**கவனிக்க** .- *07.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1850 - 2014 පෙබරවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.02.13

*1850 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 360 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 362 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 365 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, மாச்சு மாதம் 7 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## அதுரளிய பிரதேச சபை

தென் மாகாண அரச சேவையில் அத்துரளிய பிரதேச சபையில் தற்சமயம் வெற்றிடமாகியுள்ள ஆரம்பமட்ட அரைமட்ட சேவை விபரம் உட்பட்ட மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு நிரப்புவதற்காக தகுதி பெற்ற பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவிடதாரர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பின்வரும் விடயங்களுக்கு விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவமொன்றை பூர்த்தி செய்து செயலாளர், அத்துரளிய பிரதேச சபை, வைத்திய சுசீஷ்வர விக்கிரமசிங்க மாவத்தை, திப்பொடுவாவ, அக்குரஸ்ஸ என்ற முகவரிக்கு 2014.03.14 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் |
|---|---|---|---|
| 01 | மின்சார தொழில்நுட்பவியலாளர் | 01 | ரூபா 12,210- 10 ×130 – 10 x 145- 10×160-12×170 - ரூபா 18,600 06/2006 (IV) படி PL-2 - 2006-A |

3. **குறைந்தபட்ச கல்வித்தகைமைகள்** .- (i) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தவணைகளில் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

(ii) **தொழில்சார் தகைமைகள்**.- பதவியின் பணிக்கேற்றவாறு மூன்றாம் நிலை தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தொழில்நுட்ப தொழிற்பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்பட்ட (NVQ) ii ஆம் மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

குறித்த பதவிநிலையில் பெறப்பட்டுள்ள அனுபவங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

4. **உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பாக**.- இப்பதவிகள் தொடர்பாக அமைய பதில் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக அவர்கள் எந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டனரோ அச்சந்தர்ப்பத்தில் நிலவிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகள் ஏற்புடையதாகும்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் தகுதியுடையவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

6. **சேவை நிபந்தனைகள்** .-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். தெரிவுசெய்யப்படுவோர் 3 ஆண்டுகளைக் கொண்ட நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுவர்.

**ஏனைய பொது நிபந்தனைகள்** .-

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.)
(ii) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பதாரி சிறந்த நற்குணமுடையவராகவும் சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
(iv) குற்றவியல் சட்டத்தினால் நீதிமன்றமொன்றில் தண்டனை பெறாதவராகவும்/ அரச, உள்ளூராட்சி சேவையில் இருந்து நீக்கப் படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(v) அத்துரலிய பிரதேச சபைப் பிரதேசத்தில் வதிவிடம் கொண்டவரென்று கிராம சேவையாளரால் வதிவிட சான்றிதழ் பெற்று பிரதேச செயலாளரால் உறுதி செய்திடல் வேண்டும்.
(vi) ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபனக் கோவையின் நிபந்தனைகள், நிதிப் பிரமாணங்கள் தென் மாகாண சபை அரசாங்க சேவைஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகள், ஏற்பாடுகள் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் குறித்த கட்டளைச் சட்டங்கள், சட்டதிட்ட விதிமுறைகள், அத்துரலிய பிரதேச சபையினால் வழங்கப்படும் கட்டளைகள் ஆகியவற்றுடன் உடன்படுகின்றேன்.

7. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- இவ்வறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்த A4 அளவிலான தயார் செய்த விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து 2014.03.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், அத்துரலிய பிரதேச சபை, வைத்திய

சுகீஷ்வர விக்கிரமசிங்க மாவத்தை, திப்பொடுவாவ, அக்குரஸ்ஸ என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பவும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறித்திடவும். (தற்சமயம் அரச, உள்ளூராட்சிச் சேவையில் உள்ளவராயின் தமது நிறுவனத்தின் தலைவரினூடாக விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.)

8. விண்ணப்பப்படிவத்தோடு சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும். நேர்முகப்பரீட்சையின்போது மூலப்பிரதிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) வதிவிடம் தொடர்பான கிராம சேவையாளர் சான்றிதழ் ;
(iv) தொழில் ரீதியான அனுபவம் பற்றிய சான்றிதழ் ;
(v) அண்மையில் பெறப்பட்ட 2 நற்சான்றிதழ்கள் (இதில் ஒன்று கிராம சேவையாளருடையதாக இருத்தல் வேண்டும்);
(vi) சேவைச் சான்றிதழ்கள் (தற்சமயம் அரச, உள்ளூராட்சிச் சேவையிலுள்ளவர் மாத்திரம்)

9. இவ்விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் இதனை இரத்துச்செய்ய அல்லது இவ்வாட்சேர்ப்பினை ஒத்திவைக்க அல்லது மாற்றிவிடவும் மற்றும் இவ்வறிவித்தலை தள்ளுபடி செய்யும் உரிமை அத்துரலிய பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

டி. வி. ஏ. கே. த சில்வா,
செயலாளர்,
அத்துரலிய பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென் மாகாண அரச சேவையில் அத்துரலிய பிரதேச சபையின்**

............................................................................ பதவிக்கான ஆட்சேர்ப்பு

1. (அ) முதலெழுத்துடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்குரிய பெயர் :----.
2. (அ) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(ஆ) நிரந்தர வதிவிட முகவரி :----.
3. பால் :-
4. (அ) பிறந்த திகதி :-
(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது : வருடம் :----, மாதம் :----, நாள் :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
6. விவாக நிலை :----.
7. இலங்கைப் பிரசையாயின் முறை பிறப்பினாலா ? /பதிவினாலா ? :----.
8. நீர் எப்போதாவது நீதிமன்றினால் தண்டனை பெற்றுள்ளீரா? அப்படியாயின் விபரம் :----.
9. கல்வித்தகைமைகள் :----.
(அ) பரீட்சையின் பெயர் :
(ஆ) சுட்டிலக்கம் :
(இ) சித்தி பெற்ற ஆண்டு :
(ஈ) சித்தி பெற்ற பாடங்கள் : ............................ ......................................
............................ ......................................
............................ ......................................

10. தொழில் ரீதியான தகைமைகளும் அனுபவங்களும் :----.

11. நீர் தற்சமயம் இங்கு மாற்றிடைச் சேவகராக பணிபுரிபவராயின் சேவைக்காலம் மற்றும் பதவியின் தன்மை (நிரந்தர/ தற்காலிக/ கொடுப்பனவு/மாற்றிடை என்ற விபரங்கள்) :----.

12. வேறு தகைமைகள் :----.

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள எல்லாத் தகவல்களும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மை அல்லவென இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட முன்னர் அறியப்படுமாயின் நான் தகுதியற்றவன் என்றும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அறியப்படுமாயின் நட்டஈடுகள் ஏதுமின்றி சேவையிலிருந்து விலக்கி விடவும் உட்படலாம் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சிபாரிசு (தற்சமயம் சேவையில் உள்ளோராயின்) :**

விண்ணப்பதாரியால் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்படி தகவல்கள் யாவும் சரியானவையென்றும் இவர் தெரிவு செய்யப்படுவாராயின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்றும் ............ என்ற பதவியில் தற்சமயம் தொழில் புரிகிறார் என்றும் உறுதிசெய்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவர்

திகதி :----.

2-332

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## சாவகச்சேரி நகர சபை

ஆதன வரி விதித்து அறவிடல் - 2014

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 1.8 இன் பிரகாரம் பின்வருமாறு தீர்மானம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் 255 பிரிவு 160 (3) ஆம் பிரிவின் பிரகாரம் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துகளிலிருந்து வருடாந்தப் பெறுமதியின் 10% ஆன வரியொன்றினை 2014 ஆம் ஆண்டு முறையே மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு தவணைகள் மூலம் செத்தப்பட வேண்டுமென்றும் மேலும் அறிவிக்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டிற்கான முழு மொத்த ஆதனவரியினை 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம்31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் நகரசபை அலுவலகத்திற்கு செலுத்தினால் அம்முழு மொத்த வரிகளில் பத்து வீத (10%) கழிவும், ஒவ்வொரு காலாண்டு அல்லது அரையாண்டு கால வரிகளை அந்தந்த காலாண்டின் அல்லது அரையாண்டின் முதல் மாதத்தின் இறுதித் திகதி அல்லது அதற்கு முன் நகரசபை அலுவலகத்திற்கு செலுத்தினால் அக்காலாண்டு அல்லது அரையாண்டிற்கான மொத்த வரிகளில் ஐந்து வீத (5%) கழிவும் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட பந்தி (3) இன் பிரகாரம் குறிப்பிடப்பட்ட காலங்களில் வரி விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்று க்காணிகள், வதிவிடங்கள் மீது 15% உம் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
சாவகச்சேரி நகர சபை.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி,
2014, சனவரி 16.

2-244

---

## வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை - கரவெட்டி

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தம்

இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர், இடத்தில் அவரின் பெயருக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2014 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படு கின்றது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப் பட்டிருக்கும் வளவிற்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்துமூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

திருமதி தி. அன்னலிங்கம்,
செயலாளர்,
வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை அலுவலகம்,
கரவெட்டி,
2014, சனவரி 22.

**அட்டவணை**

| விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கின்ற மனைத்தளம் |
|---|---|---|---|
| ஜயாத்துரை விக்னேஸ்வரன், ஐங்கரபதி, தேவரையாளி, நெல்லியடி, கரவெட்டி. | முகாமையாளர் | ஐங்கரன் பொழுதுபோக்குக் கழகம் | பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி |

2-245

---

**ருவன்வெல்ல பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 14 மற்றும் 24 (2) பிரிவின் கீழான அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தின், ருவன்வெல்ல பிரதேச சபையினால் இங்கு கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதி பிரதேச சபைக்கு பொது உபயோகத்திற்காக உடைமைக்கு எடுத்துக்கொள்வதற்கு 2008.02.29 ஆந் திகதி கொண்ட சபை அங்கீகாரத்திற்கேற்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு குறித்த கால எல்லையினுள் அறிவித்தலிற்கேற்ப எதிர்ப்புக்கள் ஏதும் இல்லையாதலால் இவ்வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி ருவன்வெல்லைப் பிரதேச சபைக்கு உரித்தான விதியொன்றாக ஏற்று கட்டுப்படுத்தப்படுமென பிரகடனப்படுத்தப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல.

**அட்டவணை**

| இலக்கம் | கிராம சேவகர் பிரிவு | பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் முதல் முடிவு | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் அடி | இடது பக்கம் இடத்தின் உரிமையாளர் பெயர் | இடது பக்கம் இடத்தின் பெயர் | வலது பக்கம் இடத்தின் உரிமையாளர் பெயர் | வலது பக்கம் இடத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | 103 B மொராதொட | தன்னொருவ ஹீன்னே தொடக்கம் மொட்டேவ வரை பாதை | தன்னொருவ ஹீன்னே தொடக்கம் மொட்டேவ சனிக்ராப்ட்வத்த எல்லைவரை | 480 மீற்றர் | 10 அடி | 1. M. ஜினதாச அவர்கள் | கெஹெல்ஹேன வத்த | 1. G. குணபால அவர்கள் | கெஹெல் ஹேனவத்த |
| | | | | | | 2. D. சந்ரசேன அவர்கள் | கெஹெல்ஹேன வத்த | 2. P. M. அபேரத்ன அவர்கள் | கெஹெல் ஹேனவத்த |
| | | | | | | 3. P. M.. நிஷ்ஷங்க குமார | கெஹெல்ஹேன வத்த | 3. R. A. நவரத்ன அவர்கள் | கெஹெல் ஹேனவத்த |
| | | | | | | 4. R. A. நவரத்ன அவர்கள் | கெஹெல்ஹேன வத்த | 4 R. A. N. சமன் குமார அவர்கள் | கெஹெல் ஹேனவத்த |
| | | | | | | 5. M. ரத்னபால அவர்கள் | கெஹெல்ஹேன வத்த | 5. R. A. குணதிலக அவர்கள் | கெஹெல் ஹேனவத்த |
| | | | | | | 6. M. G. C. மொரவக அவர்கள் | மொட்டேவ | 6. திருமதி I. G. லிலீ அவர்கள் | மொட்டேவ |
| | | | | | | 7. M. ஆரியபால அவர்கள் | மொட்டேவ | 7. R. G. ஜண்கா அவர்கள் | மொட்டேவ |

2-277/1

---

**ருவன்வெல்ல பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தின், ருவன்வெல்ல பிரதேச சபையினால் இங்கு கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதி பிரதேச சபைக்கு பொது உபயோகத்திற்காக உடைமைக்கு எடுத்துக்கொள்வதற்கு 2008.09.29 ஆந் திகதி கொண்ட சபை அங்கீகாரத்திற்கேற்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு குறித்த கால எல்லையினுள் அறிவித்தலிற்கேற்ப எதிர்ப்புக்கள் ஏதும் இல்லையாதலால் இவ்வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி ருவன்வெல்லைப் பிரதேச சபைக்கு உரித்தான விதியொன்றாக ஏற்று கட்டுப்படுத்தப்படுமென பிரகடனப்படுத்தப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்ஜுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல.

**அட்டவணை**

| இலக்கம் | கிராம சேவகர் பிரிவு | பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் முதல் முடிவு | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் அடி | இடது பக்கம் | | வலது பக்கம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இடத்தின் உரிமையாளர் பெயர் | இடத்தின் பெயர் | இடத்தின் உரிமையாளர் பெயர் | இடத்தின் பெயர் |
| 1. | 104 C தன்னொருவ | உபஸ்வலான புலுகஹவத்த பாதை | புலுகஹவத்த தொடக்கம் அலுத்வத்த வரை | 405.5 மீற்றர் | 10 அடி | 1. A. D. விமலசிரி மற்றும் வேறு நபர்கள் | புலுகஹவத்த பஹல கெபெல்ல குபுர | 1. E. சுகதபால அவர்கள் | புலுகஹவத்த பஹல கெபெல்ல |
| | | | | | | 2. குமாரதுங்க விஜேபால அவர்கள் | புலுகஹவத்த | 2. A. D. விமலசிரி மற்றும் வேறு நபர்கள் | புலுகஹவத்த பஹல கெபெல்ல குபுர |
| | | | | | | 3. W. பியசேன அவர்கள் | புலுகஹவத்த | 3. குமாரதுங்க விஜேபால அவர்கள் | புலுகஹவத்த |
| | | | | | | 4. W. விமலசேன அவர்கள் | புலுகஹவத்த | 4 W. விமலசேன அவர்கள் | புலுகஹவத்த |
| | | | | | | 5. A. D. விமலசிரி பேமரத்ன அவர்கள் | அலுத்வத்த | 5. A. D. சரத் பேமரத்ன அவர்கள் | அலுத்வத்த |
| | | | | | | 6. A. D. ஆனந்த பேமரத்ன அவர்கள் | அலுத்வத்த | 6. A. D. சமன் பேமரத்ன அவர்கள் | அலுத்வத்த |
| | | | | | | 7. A. D. சரத் பேமரத்ன அவர்கள் | அலுத்வத்த | | |
| | | | | | | 8. A. D. சரத் பேமரத்ன அவர்கள் | அலுத்வத்த | | |
| | | | | | | 9. A. D. சுனில் பேமரத்ன அவர்கள் | அலுத்வத்த | | |

2-277/2

---

# நானவித அறிவித்தல்கள்

### சாவகச்சேரி நகர சபை

கட்டணங்கள் அறவிடுதல் - 2014

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும் சட்டவிதிகளுக்கும் அமைவாக 2013.03.22 ஆந் திகதிய 1803 ஆம் இலக்க பகுதி IV (ஆ) வர்த்தமானிப் பத்திரிகைக்கு மேலதிகமாக சாவகச்சேரி நகரசபை எல்லையினுள் 2014 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை அறவிடுவதற்கு 2013.12.17 ஆந் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் கூட்டத்தீர்மான இல. 1.9 இன் மூலம் அங்கீகாரம் வழங்கியுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
சாவகச்சேரி நகர சபை.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி,
2014, சனவரி 16.

(1) **விளம்பர அறவீடு** :

(1) குடை விளம்பரம் (நாளொன்றிற்கு) - ரூபா 500.00 (வரி நீங்கலாக)

(2) **கட்டட நிர்மாண வேலைப்பகுதி**

(1) மோட்டார் கிறேடர் இயந்திரம் வாடகைக்குவிடல் ரூபா 4,500.00 (வரி நீங்கலாக) (ஒரு மணித்தியாலம்)

2-235/1

---

### சாவகச்சேரி நகர சபை

நகரசபை இறைச்சிக்கடைகளை 2014 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு பெற்றுக்கொண்டவர்கள் விபரம் :

(1) **மாட்டிறைச்சிக்கடை இல. 01** :

திரு. கச்சு முகமது நஸீர்,
இல. 217/8, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(2) **ஆட்டிறைச்சிக்கடை இல. 01** :

திரு. கச்சு முகமது நஸீர்,
இல. 217/8, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

*(3)* **கோழி இறைச்சிக்கடை இல. 01 :**

திரு. கச்சு முகமது நஸீர்,
இல. 217/8, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

2013.11.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபையின் மாதாந்தக் கூட்டத்தின் 1.6 ஆம் இலக்கத் தீர்மானத்தின் பிரகாரம் நகரசபையால் குத்தகைக்கு வழங்கப்பட்ட கோழி இறைச்சிக்கடையிலிருந்து 1 கிலோ மீற்றருக்கு உட்பட்ட சுற்றாடலில் வியாபார நோக்கத்திற்காக கோழி வெட்டுவதும், கோழி இறைச்சி விற்பனை செய்வதும் தடைசெய்யப் பட்டுள்ளது.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
சாவகச்சேரி நகர சபை.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி,
2014, சனவரி 16.

2-235/2

---

**சாவகச்சேரி நகர சபை**

வியாபார உரிமக் கட்டணங்கள், வரிகள் அறவிடுதல் - 2014

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 162 ஆம் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைவாக 164 ஆவது பிரிவின்படி 2013.03.22 ஆந் திகதிய 1803 ஆம் இலக்க பகுதி IV (ஆ) வர்த்தமானியில் பிரசுரத்திற்கு மேலதிகமாக சாவகச்சேரி நகர சபை பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் கீழே நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் கைத்தொழிலை அல்லது வியாபாரத்தினை 2014 ஆம் வருடத்தில் தொடர்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்திற்கமைய அக்கைத்தொழிலினை அல்லது வியாபாரத்தினை மேற்கொள்ளும் இடத்தின் வருடாந்தப்பெறுமதி நிரல் II இல் குறிப்பிடப்பட்ட எல்லைக்குட்படும் சந்தர்ப்பங்களில் கீழ்வரும் பெறுமதி அடிப்படையில் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், வரிகள் அறவிடப்படுமென்று 2013.12.17 ஆந் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் கூட்டத்தீர்மான இல. 1.9 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளமையை இத்தால் அறிவிக்கின்றேன்.

இவ் அனுமதிப்பத்திரக் கட்டணம், 31.03.2013 ஆந் திகதிக்கு முன்பதாகச் செலுத்தப்படல் வேண்டும் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டிராத ஒரு வியாபார நிலையம் தொடர்பாக நகராட்சிமன்றக் கூட்டத்தீர்மானத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் தற்காலிக மதிப்பீடொன்றின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

ஒரே வரி மதிப்பு இலக்கத்தின் கீழ் கைத்தொழில்களை (வியாபாரங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கையில்) நடாத்துகையில் அத்தகைய ஒவ்வொரு கைத்தொழில்களுக்கும் (ஒரு வியாபாரம்) உரிய நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படும் நிலப்பகுதியின் பிரிவுகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்தப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய கட்டணங்கள் அல்லது வீதவரிகள் தீர்மானிக்கப்படுவதுடன், அத்தகைய வீதவரிக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
சாவகச்சேரி நகர சபை.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி,
2014, சனவரி 16.

| நிரல் I | | நிரல் II வருடாந்த வீதவரி | | | |
|---|---|---|---|---|---|
| தொ. இல. | வியாபாரத்தின் வகை | ரூ. 1,500க்கு மேற்படாத விடத்து ரூபா ச | ரூ. 1,501 க்கும் ரூ. 3,500க்கும் இடைப்படு மிடத்து ரூபா ச | ரூ. 3,501க்கும் ரூ. 4,500 க்கும் இடைப்படு மிடத்து ரூபா ச | ரூ. 4,501க்கு மேற்படு மிடத்து ரூபா ச |
| **(அ) ஆபத்தை விளைவிக்கும் தொழில்கள்** | | | | | |
| 1 | புகைப்பரிசோனை நிலையம் | 3,000 0 | 3,500 0 | 4,000 0 | 5,000 0 |
| 2 | உணவுப் பொருள்/சிற்றுண்டி உற்பத்தி செய்யுமிடம் | 500 0 | 750 0 | 1,000 0 | 2,000 0 |

| நிரல் I | | நிரல் II வருடாந்த வீதவரி | | | |
|---|---|---|---|---|---|
| தொ. இல. | வியாபாரத்தின் வகை | ரூ. 1,500க்கு மேற்படாத விடத்து ரூபா ச | ரூ. 1,501 க்கும் ரூ. 3,500க்கும் இடைப்படு மிடத்து ரூபா ச | ரூ. 3,501க்கும் ரூ. 4,500 க்கும் இடைப்படு மிடத்து ரூபா ச | ரூ. 4,501க்கு மேற்படு மிடத்து ரூபா ச |
| 3 | குளிர்களி தயாரிக்கும் நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 | 2,500 0 |
| 4 | நகை உற்பத்தி செய்யுமிடம் | 750 0 | 1,500 0 | 2,250 0 | 3,000 0 |
| 5 | உணவுப் பண்டங்கள் பொதி செய்யுமிடம் | 500 0 | 750 0 | 1,000 0 | 2,000 0 |
| (ஆ) **ஆபத்தை விளைவிக்காத தொழில்கள்** | | | | | |
| 1 | நடமாடும் தளபாட விற்பனை | 1,000 0 | 1,500 0 | 2,000 0 | 3,000 0 |
| 2 | சகல மர வகை கன்றுகள் விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 | 3,000 0 |
| 3 | நடமாடும் புடவை விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 | 3,000 0 |
| 4 | பல், மூக்கு கண்ணாடியகம் | 750 0 | 1,500 0 | 2,250 0 | 3,000 0 |
| 5 | குடி நீர்ப்போத்தல்கள் விற்பனை செய்யுமிடம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 | 3,000 0 |
| 6 | களஞ்சியம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 | 3,000 0 |

2-243

---

## யட்டிநுவர பிரதேச சபை

வாடகை வாகனங்களுக்கான கட்டணங்களை விதித்தல் - 2014

யட்டிநுவர பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடத்திய அதன் பொதுக்கூட்டத்தில் 09 : 02 : 12 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப் படுகின்றது.

எம். எம். ரி. கே. வலகெதர,
தலைவர்,
யட்டிநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டிநுவர,
2013, ஒற்றோபர் 30.

### அட்டவணை

01. பேராதனை நகரில் பேராதனை கெற்றம்பே வீதியின் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) வலதுபுறச் சந்தியிலிருந்து 30 மீற்றர்.
02. பேராதனை நகரில் கென்ஹிந்த வீதியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறமாக 20 மீற்றர்.
03. பேராதனை - கெற்றம்பே வீதியின் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) கொறாக்காதெனிய சந்திக்கு எதிரில் வலதுபுறம் மதகுத்தூண் இலக்கம் 1/4 மற்றும் 1/5 தேச சக்தி அலுவலகக் கட்டட எல்லையிலிருந்து 12 மீற்றர்.
04. பேராதனை - கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) 3/2 இலக்க மதகு அருகிலிருந்து வலதுபுறம் 10 மீற்றர்.
05. பேராதனை - கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) சோயா சந்தியின் 2/6 இலக்க மதகு அருகிலிருந்து 30 மீற்றர்.
06. பேராதனை - கெற்றம்பே வீதியில் (ஹெக்டர் கொப்பேகடுவ வீதி) ஹதபிம அதிகார சபைக் கட்டடத்தின் எதிர்ச் சந்தியிலிருந்து கொஹாகொட கட்டுகஸ்தோட்டை வீதியை நோக்கிய 20 மீற்றர்.
07. பஹல ஈரியகம சந்தியில் பிரகதி மாவத்தை நோக்கிய வலதுபுற ஆரம்பத்திலிருந்து 20 மீற்றர்.
08. பொல்கஹமுல சந்தியில் அலதெனிய வீதியை நோக்கிய இடதுபுறம் 25 மீற்றர் தூரத்தில் இருந்து 20 மீற்றர்.
09 பொல்கஹமுல ஏதண்டுவாவ சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலிருந்து ஆரம்பித்து 20 மீற்றர்.
10. கெஹெல்வல சந்தியில் கெஹெல்வல பன்சல நோக்கிய வீதியின் ஆரம்பத்திலிருந்து 10 மீற்றர்.
11. கிரிபத்கும்புற ஓவல சந்தியில் ஓவல நோக்கிய இடதுபுற வீதியின் ஆரம்பத்திலிருந்து 20 மீற்றர்.
12. கிரிபத்கும்புற நகரில் வத்துரகும்புற வீதியில் இடதுபுற ஆரம்பத்திலிருந்து 20 மீற்றர்.
13. கன்னொறுவ முருத்தலாவ வீதியில் பல்கரும மண்டப எதிரில் இடதுபுறச் சந்தியிலிருந்து முருத்தலாவ நோக்கிய 17 மீற்றர்.
14. கன்னொறுவ முருத்தலாவ வீதியில் ஒடுங்கிய பாலத்தை அடுத்து புஷ்பாராம பன்சல மாவத்தையை நோக்கிய வலதுபுற ஆரம்பத்திலிருந்து 12 மீற்றர்.
15. முருத்தலாவ நகரின் நாற்சந்தியின் அருகிலிருந்து வலதுபுறம் பொல்கஹமுல நோக்கிய 25 மீற்றர்.

16. முருத்தலாவ நகரில் கிராமிய வங்கி அருகில் இடதுபுறம் அலதெனிய நோக்கிய 20 மீற்றர்.
17. கம்பியடி சந்தியில் வலதுபுற ஆம்பத்திலிருந்து முருத்தலாவ நோக்கிய 10 மீற்றர்.
18. யஹலதன்ன சந்தியிலிருந்து பள்ளிவாசலது எதிரில் இடதுபுறம் அலதெனிய நோக்கிய 20 மீற்றர்.
19. பொல்கஹமுல அலதெனிய வீதியில் இலுக்வத்த சந்தியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறம் பொல்கஹமுல நோக்கிய 20 மீற்றர்.
20. பொல்கஹமுல அலதெனிய வீதியில் பிலபிட்டிய போதிய அருகின் எதிரில் வலதுபுறம் அலதெனிய நோககிய ஆரம்பம் தொடக்கம் 15 மீற்றர்.
21. பொல்கஹமுல அலதெனிய வீதியில் 5 ஆவது மைல்கல் அருகில் ஆரம்பத்திலிருந்து பொல்கஹமுல நோக்கிய 10 மீற்றர்.
22. கிரிபத்கும்புற வத்துரகும்புற வீதியில் புளுமுல்ல சந்தியின் கிராகாங்க நோக்கிய வலதுபுற ஆரம்பத்திலிருந்து 10 மீற்றர்.
23. கிரிபத்கும்புற வத்துரகும்புற வீதியில் சூரியகொட சந்தியின் இடதுபுற ஆரம்பத்திலிருந்து சூரியகொட நோக்கிய 10 மீற்றர்.
24. கிரிபத்கும்புற வத்துரகும்புற வீதியில் மொலதண்ட சந்தி பஸ் தரிப்பிடத்தின் இடதுபுறம் வத்துரகும்புற நோக்கிய 10 மீற்றர்.
25. கிரிபத்கும்புற வத்துரகும்புற வீதியின் இடம்பிட்டிய சந்தியின் இடதுபுறம் கிரிபத்கும்புற நோக்கிய 10 மீற்றர்.
26. தியபலாகொட சந்தியின் ஆரம்பத்திலிருந்து பெப்பொலாங்க நோக்கிய இடதுபுறம் 20 மீற்றர்.
27. கொடமுதுன சந்தியின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறம் வத்துரகும்புறம் நோக்கிய 20 மீற்றர்.
28. வத்துரகும்புற பாடசாலை மாவத்தையின் அருகிலுள்ள சந்தி.
29. வத்துரகும்புற வெவதன்ன சந்தியின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறம் வெவதன்ன நோக்கிய 10 மீற்றர்.
30. கஹவத்துகொட சந்தியின் ஆரம்பத்தனீ வலது புறத்திலிருந்து கஹவத்துகொட நோக்கிய 10 மீற்றர்.
31. கிராகம தேயிலைத் தொழிற்சாலை அருகில் நாகொல்லாகம நோக்கிய வலதுபுறம் ஆரம்பத்திலிருந்து 10 மீற்றர்.
32. பாரகெற்றவல சந்தியில் பிலிமத்தலாவ நோக்கிய பிரதான வீதியின் ஆரம்பத்திலிருந்து
33. சியம்பலாகொட சந்தியின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறம் பிலிமத்தலாவ நோக்கிய 15 மீற்றர்.
34. தந்துறை நகரின் உடவெல பாதை திரும்பும் சந்தியின் வலதுபுற ஆரம்பத்திலிருந்து 20 மீற்றர்.
35. தம்பகொட சந்தியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறம் தம்பகொட நோக்கிய 8 மீற்றர்.
36. வல்கம்பாய சந்தியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறம் தந்துறை நகர் நோக்கிய 30 மீற்றர்.
37. வில்கொவ்வாகொட சந்தியின் வில்கொவ்வாகொட நோக்கிய பாதையின் இடதுபுற ஆரம்பத்திலிருந்து 30 மீற்றர்.
38. ரத்தேபிட்டிய சந்தியின் பிரதான வீதியில் பொத்தெபிட்டிய செல்கையில் இடதுபுற பிரதான வீதியில் ஏறத்தாழ 50 மீற்றர்.
39. கெற்றபிட்டிய சந்தி ஆண்டியாதன்ன வீதியின் வலது புறமாக ஏறத்தாழ 30 மீற்றர்.
40. மெனிக்திவெல சந்தியில் பாடசாலை எதிரில் பிரதான வீதியில் பொத்தபிட்டிய நோக்கிய இடதுபுறம் ஏறத்தாழ 20 மீற்றர்.
41. பொத்தபிட்டிய நகரில் பஸ் தரிப்பிட எதிரில் பிலிமத்தலாவ நோக்கிய பாதையில் இடதுபுறம் ஏறத்தாழ 50 மீற்றர்.
42. தொடம்வல தேவாலய மளுவையின் எதிரில் பாதையில் ஏறத்தாழ 15 மீற்றர்.
43. பெப்பொலாங்க சந்தியில் பாடசாலை நோக்கியுள்ள பாதையின் வலதுபுறத்தில் ஏறத்தாழ 20 மீற்றர்.
44. உடவெல பாடசாலை அருகில் பஸ் திரும்பும் இடத்தில் ஏறத்தாழ 10 மீற்றர்.
45. கொழும்பு - கண்டி பிரதான வீதியிலிருந்து போயகம நோக்கிய பாதையின் ஆரம்பத்திலிருந்து வலதுபுறம் 30 மீற்றர்.
46. கொழும்பு - கண்டி பிரதான வீதியில் தேவதர்ம சாஸ்த்ராலய பகுதியின் பஸ் தரிப்பிடம் தவிர்ந்த ஏறத்தாழ 10 மீற்றர்.
47. கொழும்பு - கண்டி பிரதான வீதியில் ஹீரஸ்ஸகல பாதையின் இடதுபுறத்தே 10 மீற்றர்.
48. கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பழைய பிரதேச சபைக் கட்டடத்தின் அருகில் 106/4 இலக்க மதகு அருகில் ஏறத்தாழ 10 மீற்றர்.
49. தெஹியங்க பள்ளிவாயலின் எதிர்ப்புறப் பாதையில் ஏறத்தாழ 20 மீற்றர்.
50. தெஹியங்க நகர மத்தியில் பஸ் தரிப்பிடத்தின் எதிர்ப் பாதையில் ஏறத்தாழ 20 மீற்றர்.
51. தம்பலந்த சந்தியில் புத்தர்மனை அருகிலிருந்து குருந்துவத்த பாதை தவிர்ந்த பிரதான வீதியின் ஏறத்தாழ 10 மீற்றர்.
52. முன்வத்துகொட பள்ளிக்குத் திரும்பும் சந்தியிலிருந்து பள்ளிவாயல் நோக்கிய பாதையில் ஏறத்தாழ 10 மீற்றர்.
53. பலன தெகிந்த சந்தியிலிருந்து கடுகண்ணாவ நோக்கிய ஏறத்தாழ 30 மீற்றர்.
54. தந்துறை நகரத்தின் மத்தியில் பிலிமத்தலாவ நோக்கிய ஏறத்தாழ 12 மீற்றர்.
55. தந்துறை ஹாலியத்த பிலிமத்தலாவ நோக்கிய ஏறத்தாழ 30 மீற்றர்.

ஒரு முச்சக்கர வண்டிக்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 600.00 ஆகும்.

2-299/1

---

## யட்டிநுவர பிரதேச சபை

நூலகக் கட்டணம் அறவிடல் - 2014

யட்டிநுவர பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடத்திய அதன் பொதுக்கூட்டத்தில் 09 : 02 : 11 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப் படுகின்றது.

எம். எம். ரி. கே. வலகெதர,
தலைவர்,
யட்டிநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டிநுவர,
2013, ஒற்றோபர் 30.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| சேவைக்கட்டணம் | 50 0 |
| வைப்புத் தொகை | 50 0 |
| படிவக் கட்டணம் | 20 0 |
| தாமதக் கட்டணம் ஒரு புத்தகத்துக்கு ஒரு நாளுக்கானது | 1 0 |

2-299/2

---

## யட்டிநுவர பிரதேச சபை

சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் - 2014

யட்டிநுவர பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடத்திய அதன் பொதுக்கூட்டத்தில் 09:02:10 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

எம். எம். ரி. கே. வலகெதர,
தலைவர்,
யட்டிநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டிநுவர,
2013, ஒற்றோபர் 30.

2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 26 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் குறித்த சட்டத்தின்படி தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 1 ஆந் திகதி முதல் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்கள், கருமங்கள் கடமைகளைச் செயற்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டளைகளுக்கும், மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய குறித்த தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இங்கு அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக வழக்குத் தொடுப்பதற்கான அதிகாரம் உள்ளிட்ட அவ்வாறான அதிகாரங்கள், கருமங்கள், கடமைகளுடன் பிரித்தெடுக்கப்பட்ட மற்றும் தொடர்புள்ள அனைத்துச் செயற்பாடுகளும் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயன்முறைகளுக்கமையத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவ்வாறான அதிகாரங்கள், கருமங்கள், கடமைகள் குறித்த தலைவரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1533/16 ஆம் இலக்கம் 2008, சனவரி 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் 25 தொழில் முயற்சிகளுக்கெனச் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல்.

அட்டவணை

01 அனைத்து வாகனங்களுக்குமான எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் (திரவப் பெற்றோலியம்).

02 10 அல்லது 10 இற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட மெழுகுதிரி உற்பத்திக் கைத்தொழில்.

03 10 அல்லது 10 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் அல்லது 25 இலும் குறைந்த பணியாளர்களைக் கொண்ட தேங்காய் எண்ணெய் வடிக்கும் கைத்தொழில்.

04 10 அல்லது 10 இற்கு மேற்பட்ட பணியாளர்களையும் 25 இலும் குறைந்த பணியாளர்களையும் கொண்ட மதுபானம் தவிர்ந்த குடிவகைகள் உற்பத்தி கைத்தொழில்.

05 உலர்த்தும் செயல்முறையிலான அரிசி ஆலைகள்

06 மாதாந்த உற்பத்தி 1000 கிலோ கிராம் கொள்ளளவு கொண்ட அரைக்கும் ஆலைகள்.

07 புகையிலை உலர்த்தும் கைத்தொழில்.

08 சல்பர் புகையூட்டும் செயன்முறையுடனான 500 கிலோ கிராம் உற்பத்தித் திறன் கொள்ளளவு கொண்ட கறுவா புகையூட்டும் கைத்தொழில்.

09 மேசையுப்பு தயாரிக்கும், பொதியிடும் கைத்தொழில்.

10 உடனடித் தேயிலை தவிர்ந்த ஏனைய தேயிலைத் தொழிற்சாலைகள்.

11 கொங்கிறீட் உற்பத்தி நிலையங்கள்.

12 பொறிமுறையிலான சீமெந்து அச்சுக்கல் உற்பத்தி கைத்தொழில்.

13 ஒரு நாளில் 20 மெற்றிக் தொன்னுக்கும் குறைவான உற்பத்திக் கொள்ளளவு கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்.

14 பாரிசுச் சாந்து உற்பத்திக் கைத்தொழில் அல்லது 25 இலும் குறைவான பணியாளர்கள் கொண்ட பீங்கான் உற்பத்திக் கைத்தொழில்.

15 அனைத்து சிப்பிகளையும் அரைக்கும் கைத்தொழில்.

16 ஓடுகள், செங்கல் உற்பத்திக் கைத்தொழில்.

17 ஒரு தடவைக்கு ஒரு குழியளவுள்ள வெடி மருந்துகளை உபயோகித்து மாதாந்தம் 600 கனமீற்றர் உற்பத்திக் கொள்ளளவை விடக் குறைந்த மனித வலுவையும் வெடி மருந்துகளையும் கொண்டு மேற்கொள்ளப்படும் அகழ்வுகள்.

18 நாளொன்றிற்கு 50 கனமீற்றருக்கு குறைந்த அரியும் கொள்ளளவு கொண்ட அரிமர ஆலைகள் அல்லது பொரோன் பதனிடும் முறையின் மூலம் அரிமரம் பதனிடும் கைத்தொழில்கள் அல்லது அரிமரம் பதனிடும் கைத்தொழில்கள்.

19 பல்கருமப் பொறிகளைப் பயன்படுத்தும் தச்சுத்தொழில் அல்லது 5 க்கு மேற்பட்ட 25 க்கு குறைவான பணியாளர்களைக் கொண்ட அரிமரம் தொடர்பான கைத்தொழில்.

20 5 அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 இலும் குறைவான அறைகள் கொண்ட ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள், வாடிவீடுகள்.

21 வாகனங்களின் வளிசீராக்கிகளின் திருத்துதல், பராமரித்தல், பொருத்துதல் மற்றும் விசிறல் பெயின்ட் செய்யும் பட்டறைகள் தவிர்ந்த வாகனத் திருத்தவேலைகள் செய்யும்/பராமரிப்புச் செய்யும் பட்டறைகள்.

22 குளிரூட்டிகள், வளிசீராக்கிகள் திருத்துதல், பராமரித்தல், பொருத்துதல் செய்யும் நிலையங்கள்.

23 வாகன சர்விஸ் வேலைகள் செய்யாத கொள்கலன் பிரிவுகள்.

24 10 அல்லது அதிலும் கூடிய அளவு பணியாட்கள் சேவையில் ஈடுபடும் அனைத்து மின்சார உபகரணங்கள் அல்லது இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தும் நிலையங்கள்.

25 ஈயம் உருக்காது மேற்கொள்ளப்படும் அச்சகங்கள் மற்றும் எழுத்து அச்சகங்கள்.

**விண்ணப்பப்படிவக் கட்டணங்கள்**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1 | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர விண்ணப்பப்படிவம் | 100 0 |
| 2 | சுற்றாடல் அனுமதிப்பத்திர புதுப்பிக்கும் விண்ணப்பப்படிவக் கட்டணம் | 50 0 |
| 3 | மூன்று வருடகாலம் செல்லுபடியாகும் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,000 0 |
| 4 | அபாயகரமான மரங்களை அகற்றும் படிவக் கட்டணம் | 500 0 |

1-299/3

---

**யட்டிநுவர பிரதேச சபை**

கைத்தொழில் பரிசீலனைக் கட்டணம் - 2014

யட்டிநுவர பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடத்திய அதன் பொதுக்கூட்டத்தில் 09:02:08 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

எம். எம். ரி. கே. வலகெதர,
தலைவர்,
யட்டிநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டிநுவர,
2013, ஒற்றோபர் 30.

உரிய வேலையின் அல்லது செயற்றிட்டத்தின் அடிப்படை மூலதன முதலீட்டை அடிப்படையாகக் கொண்டே வெளிக்களக் கட்டணத்தின் உச்ச எல்லை தீர்மானிக்கப்படும். பின்வரும் அடிப்படையில் வெளிக்களக் கட்டணத்தின் உச்ச அளவு அறவிடப்படும்.

| முதலீடு | பரிசீலனைக் கட்டணம் (உச்ச அளவு) ரூபா ச. |
|---|---|
| 01 250,000 அல்லது அதிலும் குறைய | 1,000 0 |
| 02 250,001 - 500,000 | 3,000 0 |
| 03 500,001 - 1,000,000 | 5,000 0 |
| 04 1,000,000 இற்கு மேல் | 10,000 0 |

2-299/4

---

**நல்லூர் பிரதேச சபை**

சான்றிதழ்களுக்கும் படிவங்களுக்குமான கட்டணம் விதித்தல் - 2014

2013.01.01 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் சான்றிதழ்கள் படிவங்கள் பொருட்டு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் 2013.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்று 26.12.2013 ஆந் திகதிய 295 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ப. வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகம்,
14/5, கருவப்புலம் வீதி,
கொக்குவில்,
2014, சனவரி 08.

| | | ரூபா ச. |
|---|---|---|
| 01 | காணிப்பெயர் மாற்று படிவக்கட்டணம் ஒன்று | 400 0 |
| 02 | காணிப்பெயர் மாற்று பரிசீலனைக்கட்டணம் | 40 0 |
| 03 | கட்டட விண்ணப்பப்படிவக் கட்டணம் | 500 0 |
| 04 | குடியமர்வு சான்றிதழ் கட்டணம் (COC) | 400 0 |
| 05 | ஆதன உடமைச்சான்றிதழ் கட்டணம் | 300 0 |
| 06 | ஆதனம் சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் கட்டணம் | 300 0 |
| 07 | வீதி எல்லைச்சான்றிதழ் கட்டணம் | 300 0 |
| 08 | நூலக அங்கத்தவர் விண்ணப்பப்படிவக் கட்டணம் | 10 0 |
| 09 | நூலக அங்கத்துவக் கட்டணம் (ஒவ்வொரு வருடமும்) | |
| | பிரதேச சபை எல்லைக்குள் வசிப்போர் | 150 0 |
| | பிரதேச சபை எல்லைக்கு வெளியே வசிப்போர் | 200 0 |
| 10 | நூலக அங்கத்துவ புதுப்பித்தல் கட்டணம் | 30 0 |

| | | ரூபா ச. |
|---|---|---|
| 11 | நூலக வாசகர் அட்டைக்கட்டணம் | 10 0 |
| 13 | படவரைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் | 2,000 0 |
| 14 | படவரைஞரை புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் | 2,000 0 |
| 15 | உத்தரவுபெற்ற நில அளவையாளராக பதிவு செய்வதற்கான கட்டணம் | 2,000 0 |
| 16 | சூழல் பாதுகாப்பு உரிம விண்ணப்பப்பத்திர கட்டணம் | 20 0 |
| 17 | சூழல் பாதுகாப்பு உரிம கட்டணம் | 4,000 0 |
| 18 | வியாபார/தொழில் உரிம விண்ணப்பப்பத்திரக் கட்டணம் | 10 0 |
| 19 | இறந்தவர்களை மயானத்தில் எரியூட்டல்/ புதைத்தல் சம்பந்தமான கட்டணம் | 1,250 0 |
| 21 | அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்தின் மேலதிக பிரதி வழங்குவதற்கான கட்டணம் | 50 0 |
| 22 | வாகன வரி/மிருகவரி விண்ணப்பப்பத்திரம் | 5 0 |

2-420/9

---

## நல்லூர் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச்சட்டம்*

*நடைமுறைப்படுத்தப்படும் உரிமக்கட்டணங்கள், வாகனங்கள், மிருகங்கள் பற்றிய வரி மற்றும் வருடாந்த தொழில் மூலதன வரிக்கட்டணங்கள் - 2014*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 143, 147, 148, 150, 151, 152, 153, 154 ஆகிய பிரிவுகளின் கீழ் நல்லூர் பிரதேச சபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின்படி 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து விதித்து அறவீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையின் பின்வரும் உப அலுவலகங்களில் (நல்லூர், கொக்குவில்) செலுத்தப்படல் வேண்டும் என்றும், தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறுபவர்களுக்கு எதிராக பிரதேச சபைச்சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என 26.12.2013 ஆந் திகதிய 295 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

ப. வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை அலுவலகம்,
கொக்குவில்.

### அட்டவணை 1

149 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய உரிமக்கட்டணங்கள்

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை (அருவருப்பானவை) | வருடாந்த மதிப்பீடு ரூபா 750 இற்கு மேற்படாத விடத்து ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 751 இலிருந்து ரூபா 1,500 வரை ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 1,500 க்கு மேல் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 01. | உணவகம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 02. | தேநீர்/கோப்பிக்கடை | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 03. | குளிர்பான விற்பனை நிலையம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 04. | பாண் போறணை | 500 0 | 1,000 0 | 1,500 0 |

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை (அருவருப்பானவை) | வருடாந்த மதிப்பீடு ரூபா 750 இற்கு மேற்படாத விடத்து ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 751 இலிருந்து ரூபா 1,500 வரை ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 1,500 க்கு மேல் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 05. | இரு பாண் போறணைக்கு மேல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 06. | பாண் பதப்படுத்தல்/சேமித்தல்/விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 07. | வாயு அடைத்த பானம் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 08. | தங்கும் விடுதி | 3,000 0 | 4,000 0 | 5,000 0 |
| 09. | மரக்கறி விற்பனை | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 10. | பழக்கடை | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 11. | மீன் சேகரிப்பு நிலையம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 12. | கருவாடு விற்பனை/களஞ்சியப்படுத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | சாதாரண சாப்பாட்டுக்கடை | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 14. | தேநீர், சாப்பாடு ஒருங்கிணைந்த கடை | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 15. | றொட்டிச்சாலை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. | பால்/மோர்/தயிர் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. | மாட்டிறைச்சிக்கடை 01 | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 18. | ஆட்டிறைச்சிக்கடை 01 | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 19. | மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக்கடை | 1,500 0 | 3,000 0 | 5,000 0 |
| 20. | பழரசம், ஜாம் உற்பத்தி, விற்பனை | 2,000 0 | 3,000 0 | 4,000 0 |
| 21. | கோழி இறைச்சி விற்பனை | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 22. | கோழிப்பண்ணை வைத்திருத்தல் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 23. | யூஸ் உற்பத்தி விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24. | ஐஸ்கிறீம் உற்பத்தி விற்பனை நிலையம் | 1,500 0 | 2,500 0 | 4,000 0 |
| 25. | மென்பான உற்பத்தி விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26. | முட்டை விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27. | நல்லெண்ணெய் உற்பத்தி விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28. | தேங்காய் எண்ணெய் உற்பத்தி விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29. | ஐஸ்கட்டி உற்பத்தி விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30. | சிற்றுண்டிச்சாலை (தனியார் கல்வி நிலையம்) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31. | குளிர்பான நிலையத்தில் உப உணவு விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32. | அரிசி/தானிய வகை விற்பனை/களஞ்சியப்படுத்தல் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 33. | மருந்து விற்பனை (பார்மசி) | 2,000 0 | 3,000 0 | 4,000 0 |
| 34. | மருந்து விற்பனை (ஆயுர்வேதம்) | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 35. | பால் மாப்பைக்கற் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36. | மருந்து விற்பனை நிலையத்தில் ஏனைய உப உணவு வகை விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37. | பல்பொருள் வாணிபம் | 2,000 0 | 2,500 0 | 3,000 0 |
| 38. | சில்லறைக்கடை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39. | பிஸ்கட், பணிஸ் ஏனைய உற்பத்தி விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 40. | சொக்லட் வகை விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41. | தேங்காய் கடை | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 42. | தண்ணீரை போத்தலில் அடைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 43. | மரக்கறி துவிச்சக்கரவண்டி மூலம் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44. | உணவு வகைகளை தயாரித்து தேநீர், உணவகங்களுக்கு வழங்கல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 45. | வைபவ வேளைகளில் சமைத்த உணவு விநியோக சேவை | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 46. | தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47. | சிற்றுண்டிச்சாலை (பாடசாலை) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48. | துவிச்சக்கரவண்டி, தோளில், மோட்டார் சைக்கிள். மீன் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49. | மீன்விற்பனை நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50. | மீன்களை மொத்தமாக விற்பனை செய்தல் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை (அருவருப்பானவை) | வருடாந்த மதிப்பீடு ரூபா 750 இற்கு மேற்படாத விடத்து ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 751 இலிருந்து ரூபா 1,500 வரை ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 1,500 க்கு மேல் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 51. | தள்ளுவண்டி மூலம் பாண், பணிஸ், ஏனைய உப உணவுகளை விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52. | பாற்பண்ணை ஒன்றை வைத்திருத்தல் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 53. | கால்நடை/ஆடு பண்ணை ஒன்றை வைத்திருத்தல் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 54. | அப்பளம் உற்பத்தி விற்பனை நிலையம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 55. | சத்துணவு தயாரிக்கும் நிலையம் நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 56. | உணவுப்பொருட்களை பொதியிடலும் விற்பனையும் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |

**அட்டவணை 2**

150 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய உரிமக்கட்டணம்

| தொ. இல. | வியாபாரத்தின் பெயர் அபாயகரமானதும் ஆபத்தானதும் | வருடாந்த பெறுமதி ரூபா 750 வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூபா 750 ரூபா 1,500 வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூபா 1,500 க்கு மேல் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 01. | புதிய, பழைய மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யும் இடம் | 3,000 0 | 4,000 0 | 5,000 0 |
| 02. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யுமிடம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 03. | மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 04. | துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யுமிடம் | 500 0 | 1,000 0 | 2,000 0 |
| 05. | துவிச்சக்கரவண்டி விற்பனை செய்யுமிடம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 06. | துவிச்சக்கரவண்டி திருத்தும் நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 07. | முச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யுமிடம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 08. | முச்சக்கரவண்டி விற்பனை செய்யுமிடம் | 3,000 0 | 4,000 0 | 5,000 0 |
| 09. | முச்சக்கரவண்டி திருத்தும் நிலையம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 10. | குளிர்சாதனப்பெட்டி விற்பனை நிலையம் | 2,000 0 | 3,000 0 | 4,000 0 |
| 11. | குளிர்சாதனப்பெட்டி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யுமிடம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 12. | குளிர்சாதனப்பெட்டி திருத்துமிடம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 13. | தொலைக்காட்சிப்பெட்டி, வானொலி விற்பனை நிலையம் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 14. | தொலைக்காட்சிப்பெட்டி, வானொலி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யுமிடம் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 15. | தொலைக்காட்சிப்பெட்டி, வானொலி திருத்துமிடம் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 16. | கணினி அல்லது கணினி உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் | 3,000 0 | 4,000 0 | 5,000 0 |
| 17. | கணினி திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 18. | கணினி அச்சிடும் அல்லது திரையில் அச்சிடும் நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 1,000 0 | 2,000 0 | 3,000 0 |
| 19. | கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம் | 3,000 0 | 4,000 0 | 5,000 0 |
| 20. | ஒலிபெருக்கிகள் வாடகைக்கு கொடுக்கும் இடம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 21. | பற்சிகிச்சை நிலையம் நடாத்துதல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 22. | தைத்த ஆடைகளை விற்பனை செய்யுமிடம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
